உ

சிவமயம்

# அருள்மிகு சௌந்தரநாயகி உடனுறை நாகநாதசுவாமி திருக்கோயில்.

(கேது பரிகார ஸ்தலம்)

கீழப்பெரும்பள்ளம், வாணகிரி அஞ்சல் –609 105

தரங்கம்பாடி வட்டம், நாகப்பட்டிணம் மாவட்டம்.

ph: 04364 -260424www.kethutemple.org. gmail: kethutemple@gmail.com

# ஸ்ரீகேது பெயர்ச்சி விழா பத்திரிக்கை

விநாயகர் துதி

ஐந்து கரத்தனை யானை முகத்தானை
இந்தின்இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுக்கின்றேனே.

கேது படம்

கேது துதி

மாதுசேர் நெடுமால் முன்னால் மாதிரி வலமே போந்து
நீதியாய் நடுவகுத்து நிறைதளர் தந்தையைச் சீர்க்கும்
மாது சேய் கதிர்விழுங்கும் சிவன் கையில் சிரமேபெற்ற
கேதுவே உனைத் துதிப்பேன் கீர்த்தியாய் ரட்சிப்பாயே.

நாகை மாவட்டம், தரங்கம்பாடி வட்டம், கீழப்பெரும்பள்ளம் அருள்மிகு நாகநாதசுவாமி திருக்கோயிலில் எழுந்தருளி அருள்பாலித்து வரும் ஸ்ரீகேது பகவான் நவக்கிரகங்களின் முதன்மைமூர்த்தி ஆவார். ஞானமோட்சத்திற்கு அதிபதியான ஸ்ரீகேது பகவான் ஒன்றரை ஆண்டுகாலத்திற்கு ஒரு முறை ஒரு இராசியில் இருந்து மற்றொரு ராசிக்கு பிரவேசிக்கிறார். அதுபோல் இந்த ஆண்டு **நிகழும் மங்களகரமான விளம்பி வருடம் மாசி மாதம் 1–ம் தேதி (13.02.2019) புதன் கிழமை பகல் 2 மணி 4 நிமிடத்திற்கு ஸ்ரீ கேது பகவான் மகர ராசியிலிருந்து தனுர் ராசிக்கு பிரவேசிக்கிறார்.**

இதனை முன்னிட்டு பரிகாரம் செய்து கொள்ள வேண்டிய ராசிகள்:

**1. மேஷம் 2.ரிஷபம் 3. மிதுனம் 4. சிம்மம் 5. கன்னி**
**6.விருச்சிகம் 7. தனுசு 8. மகரம் 9.மீனம்**
**பரிகார வேள்வி கட்டணம் நபர் ஒருவருக்கு ரூ. 100/–**

| தமிழ் தேதி | ஆங்கில தேதி | கிழமை | நேரம் | நிகழ்ச்சி விபரம் |
|---|---|---|---|---|
| விளம்பி வருடம் தை மாதம் 29–ஆம் தேதி | 12.02.2019 | செவ்வாய் | மாலை 5.00 மணிக்கு | அனுக்ஞை , விக்னேஸ்வரபூஜை, ஸ்ரீ மகா கணபதி ஹோமம். நவக்கிரஹ ஹோமம் |
| | | | இரவு 6.00 மணிக்கு | கேது பரிகார யாக வேள்வி ஆரம்பம் |
| | | | இரவு 8.30 மணிக்கு | முதற் கால பூர்ணாஹுதி, தீபாராதனை ,அருட்பிரசாதம் வழங்குதல் |
| விளம்பி வருடம் மாசி மாதம் 1–ஆம் தேதி | 13.02.2019 | புதன் | காலை 9.00 மணிக்கு | இரண்டாம் கால கேது பரிகார யாக வேள்வி தொடர்ச்சி |
| | | | மதியம்12.00 மணிக்கு | மகா பூர்ணாஹுதி, தீபாராதனை |
| | | | மதியம்12.30 மணிக்கு | ஸ்ரீகேது பகவானுக்கு சிறப்பு அபிஷேகம் |
| | | | மதியம்1.30 மணிக்கு | கடம் புறப்பாடு, மஹா அபிஷேகம் |
| | | | மதியம் 2.04 மணிக்கு | ஸ்ரீகேதுபெயர்ச்சி மகா தீபாரதனை அதனை தொடர்ந்து பிரசாதம் வழங்குதல். |

பக்த கோடிகள் அனைவரும் தாங்கள் தங்களுடன் செல்வ சிறார்களுடன் மேற்படி விழாவில் கலந்து கொண்டு எல்லாம் வல்ல அருள்மிகு கேது பகவானின் திருவருள் பெற்று வளமோடு வாழ அன்புடன் அழைக்கின்றோம்.

தோஷ பரிகாரம் செய்து கொள்ள வேண்டிய அன்பர்கள் தங்களுடைய பெயர், நட்சத்திரம், இராசி, கோத்திரம், ஆகிய முழு விபரங்களுடன் ரூ. 100/–க்கான பணவிடை அல்லது டிமாண்ட் டிராப்ட் (M,O or D.D) எடுப்போர் செயல் அலுவலர் (Executive Officer) அருள்மிகு நாகநாதசுவாமி திருக்கோயில், கீழப்பெரும்பள்ளம் என்ற பெயருக்கு இந்தியன் ஓவர்சீஸ் பேங்க், காவிரிபூம்பட்டினம் கிளையில் மாற்றத்தக்க வகையில் எடுத்து கீழ்க்கண்ட திருக்கோயில் முகவரிக்கு அனுப்பி வைத்து பிரசாதம் பெற்றுக் கொள்ளலாம், நேரில் வர இயலாத அன்பர்களுக்கு கேது பெயர்ச்சி விழா பிரசாதம் அஞ்சல் மூலம் அனுப்பிவைக்கப்படும், மேலும் விபரங்களுக்கு www.kethutemple.org. mail: kethutemple@gmail.com என்ற இணையதளத்தில் பார்த்து தெரிந்து கொள்ளலாம்.

அனுப்ப வேண்டிய முகவரி: செயல் அலுவலர், அருள்மிகு நாகநாதசுவாமி , திருக்கோயில், கீழப்பெரும்பள்ளம், வாணகிரி அஞ்சல் – 609 105 , தரங்கம்பாடி வட்டம். நாகை மாவட்டம்,

அழைத்து மகிழும்

பா. அன்பரசன் B.B.A
செயல் அலுவலர்

தி. பாலு
ஆய்வர்/ செம்பனார்கோயில்

இ. ஜீவானந்தம் எம்.எஸ்.சி., பி.எல்.,
தக்கார்/து.ஆணையர்(கூ.பொ)இ.ச.அ.நி.துறை. மயிலாடுதுறை.

திருக்கோயில் அர்ச்சகர்கள், பணியாளர்கள் மற்றும் கிராமவாசிகள்,